# வள்ளிநாயகியின்



# வரலாற்றுச் சுருக்கம்

## திருச்சிற்றம்பலம்

### பிள்ளையார் வணக்கம்

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையை காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழ்த்து பிள்ளையை பேணுவாம்.

### முருக வணக்கம்

இறவாமற் பிறவாமல் எனையாழ் சற்குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதை புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமானே.

## திருப்புகழ்

தான தன தன தான தன தன
தான தன தன — தன தான
தான தன தன — தன தான.

பாதி மதி நதி போதும் அணிசடை நாதர் அருளிய —
குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள் பாதம் வருடிய —
மணவாளா
காதும் ஒரு விழி காகம் உற அருள் மாயன் அரிதிரு —
மருகோனே
காலன் எனை அணுகாமல் உன திரு காலில் வழிபட —
அருள்வாயே
ஆதி அயனொடு தேவர் சுரருலக காணும் வகையுறு —
சிறைமீளா
ஆடு மயிலினில் ஏறி அமரர்கள் சூழவலம் வரும் —
இளையோனே
சூதம் மிக வளர் சோலை மருவுசு வாமி மலைதனில் —
உறைவோனே
சூரன் உடலற வாரிசு வறிட வேலை விடவல — பெரு
மானே.

# முன்னுரை

எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றிய கதிர்காமத்தின் மூல கர்த்தாவாகிய வள்ளிநாயகியின் கதையை முருக பக்தர்கள் படித்தும் கேட்டும் இன்புற வேண்டும் என்னும் அவாவினாலும்,

செல்லக் கதிர்காம நிர்வாகஸ்தர் கௌரவ ஒக்கந்தையாய தேவானந்த தேரோ அவர்களினதும் இன்னும் அறிவில் சிறந்த தமிழ் பெரியார்களினதும் ஊக்கத்தாலும் உதவியாலும்,

வள்ளிநாயகியின் கதையை புராண இதிகாசங்களில் சொல்லியபடி இந்நூலை பயபக்தியோடு எழுதி முருக பக்தர்களின் முன் சமர்ப்பிக்கின்றேன். நாங்கள் காலத் தொடக்கம் அறிய முடியாத காலம் தொடக்கம் பரம் பரை, பரம்பரையாக,

ஈழவள நாட்டின் குன்றினில் தீபமாக ஒளிர்க்கும், இலங்கை மாதாவின் மணிமுடி போல் விளங்கும், எல்லா சமூகத்தவர்களின் உள்ளங்களில் குடிகொண்ட, கதிர் காமக் கந்தனைப் போற்றி, துதித்து, வணங்கி அவன் அருள் பெற்று வாழ்ந்தோம், வாழ்கிறோம், வாழ்வோம்; எங்கள் சமூகத்தவர்கள் தன்னலம் கருதும் ஆசாமிகளின் கதைகளைக் கேளாமல்,

செல்லக் கதிர்காமம் முன்பு இருந்ததிலும் பார்க்க எவ்வளவோ முன்னேறி, பக்தர்களின் உள்ளங்களை கவர் கின்ற புனித பூமி ஆகிவிட்டது; இங்கே எழுந்தருளி இருக்கும், சக்திவேற் குமரன், பக்தர்கள் ஆச்சரியப் படக் கூடியதாக, கோரிக்கைகள் நிறைவேற அருள் புரிந்து கொண்டு, வள்ளி தெய்வானை சமேதரராக எழுந் தருளி இருக்கின்றான்.

வாழையடி, வாழையாக, வணங்கி வரும் கதிர் காமக் கந்தனை விட்டு தூரத், தூர போகாமல், உன் பாதார விந்தங்களை எங்கள் மூதாதையர் மறவாமல்

வந்து தரிசித்து இன்பம் அடைந்தது போல, நாங்களும் எங்கள் சந்ததியும் வணங்கி அருள் பெற்று உய்ய அருள் புரியும், சக்திவேல் பிடித்த சண்முகா! என்று வணங்குவோம், முருக பக்தர்களே! சிந்திப்போம் கடந்த காலத்தை செல்லக் கதிர்காமக் கந்தனை வருடம் தவருமல் தரிசிக்கும் எத்தனையோ பக்தர்கள் எங்களுக்குள் வாழ்கிருர்கள். இளம் சந்ததியினர் இந்த முருக பக்தர்களை கேட்டு அறியலாம். செல்லக் கதிர்காமம் என்ன நிலையில் பத்து வருசங்களுக்கு முன் இருந்தது என்பதை,

அந்தக் காலத்தில் இந்த புனித பூமியைத் தரிசித்த எங்கள் சமூகத்தவர்களும், சிங்கள, முஸ்லீம், சகோதரர்களும், வாரி வழங்கிஞர்கள்: கோவிலுக்கு வேண்டிய தளபாடங்கள் இன்னும் கோவில் கட்டிடப் பொருள்கள் முதலானவைகளையும் கொடுத்து உதவிஞர்கள். இந்தப் புனித பூமியைப் பரிபாலித்தவர்கள். தான்தோன்றித் தனமாக நடந்தார்கள், பெண்களோடு குடும்பமாக இருந்தார்கள், தெய்வங்கள் மனித ரூபத்தில் நடமாடிய வாழ்ந்த புனித பூமியை மதிக்கவில்லை. சிற்றின்பக் கோட்டை ஆக்கிஞர்கள். வள்ளிபுனத்தில் ஏறுவதற்குப் படிகள் இல்லாமல் வேரிலும் தடியிலும் பிடித்துக் கொண்டு பக்தர்கள் மேலே வந்தார்கள். தெய்வங்கள் கட்டடம் இல்லாமல், எங்கள் இஸ்ட குலதெய்வங்களின் ரூபங்கள் மரங்களுக்குக் கீழ் மழையில் நனையவும், வெய்யிலே காயவும் விட்டார்கள்.

செல்லக் கதிர்காமத்தை ஆவலோடு பல சிரமங்களையும் தாங்கி தரிசிக்க வரும் முருகன் அடியார்கள், தங்கி ஆறுதல் அடைய ஒரு மடமாவது கட்டவில்லை.

தற்காலம் வள்ளிபுனத்தில் ஒரு தங்கு மடுவத்தைத் திருப்பணிச் சபை தலைவர் வசதிக்குத் தகுந்தாற் போல் கட்டி பக்தர்களின் பாவினைக்கு விட்டிருக்கிருர்கள்.

கீழே மாணிக்கம் பிள்ளையார் கோவில் சுற்ருடலில் மடமோ அன்னதானம் கொடுக்கக்கூடிய வசதியோ கிடையாது. முருகனை நம்பி வந்த எத்தனையோ அடியார்கள் பசி பட்டினியோடு தவிக்கிருர்கள். அப்படித் தவிப்பவர்களுக்கு வள்ளிபுனத்தில் அன்னம் கொடுத்து பசி ஆறவைத்து அனுப்புகின்ருர் திருப்பணிச் சபைத் தலைவர் தேவானந்த தேரோ அவர்கள்.

அரசாங்கம் பொதுசன நிதி உதவியோடு புனித கதிர்காமத்தை முன்னேற்ற அரும் பாடுபடும் இந்த நேரத்தில். தனியார் கோவிலில்களில் கிடக்கும் லட்சக் கணக்கான ரூபாய் வருமானத்தை என்ன செய்கிறார்களோ! தெரியாது. ஆண்டவன்தான் அறிய வேண்டும். இந்த மாதிரியான தன்னலம் கருதும் ஆசாமிகள் கந்தனின் புனித பூமியில் செய்த அட்டகாசத்தால் கந்தனின் கோபப் பார்வைக்கு ஆளாகி, வெளியேறி விட்டார்கள். வெளியேறவும் உள்ளார்கள். இவர்கள் தாங்கள் உதவி செய்யா விட்டாலும் பரவாய் இல்லை. செய்பவர்களை இல்லாத பொய்களையும், சமய, சாதி, குல, இட, பேதம் கதைத்து முருக பக்தர்களின் மனதைக் கெடுக்கிறார்கள்.

இந்த மாற்றான் பணத்தில் மகிழ்ந்து வாழ்ந்த தொண்டர்கள், என்ன சொன்னாலும் செய்தாலும் கந்தனின் அருள் உண்மை அன்பர்களுக்கு இருந்து கொண்டே இருக்கும்.

அவன் அருளால் வடிவேலவன் முதல்முதல் அவன் கமலப் பாதங்களை ஊன்றிய புனித பூமி அழியாமல் காப்பதற்கும் எங்கள் சமூகத்தையும் உரிமையோடு வணங்க வைப்பதற்கும் முருகனின் தூதராய் வந்தார், அன்பே உருவானவரும் ஆசார சீலரும், முருக பக்தரும், ஒன்றே குலம் எல்லோரும் ஆண்டவனின் மக்கள் என்னும் பெரும் எண்ணம் கொண்டவருமாகிய, கௌரவ ஓக்கந்தையாய தேவானந்த தேரோ அவர்கள்.

சுவாமிகள் செல்லக் கதிர்காம வள்ளிபுனத்தை முருகன் அருளால் பாரம் எடுத்தபின் எவ்வளவோ தொண்டுகள் செய்கிறார்கள். பக்தர்களின் தேவையை உணர்ந்து செயலாற்றுகிறார்கள். கோவில்களைக் கட்டினார்கள், நிலத்தை மட்டமாக்கி நிழல் மரங்களை உண்டாக்கினார். பயங்கர சர்ப்பங்கள் நிறைந்த இடத்தை பயமின்றி உலாவக் கூடிய சோலையாக்கினார்கள். பக்தர்கள் தங்க மடுவத்தை கட்டினார்கள். பக்தர்கள் சிரமம் இன்றி ஏற, படிகளைக் கட்டுவித்தார்கள். பூசகர்களையும் தொண்டர்களையும் வைத்து அவர்களுக்கு சம்பளம் சாப்பாடு கொடுத்து நித்திய பூசைகளும், கோவில்கள் ஒளிகுன்றாமல் ஆசார முறைப்படி பரிபாலித்து தெய்வ தொண்டே! முதற் தொண்டு என்னும் பெருமனதோடு ஒழுகுகின்றார்கள்.

முருக பக்தர்களாகிய நாங்கள் வீணர்களின் கதைகளைக் கேளாமல், சாதி, மத, இடபேதம் பாராமல் செல்லக் கதிர்காம வள்ளிபுன முன்னேற்றத்திற்கு நிதி உதவி செய்து தர்மவான்களாக வாழவும்,

செல்லக் கதிர்காமம் ஒதுக்குப்புறமான இடத்தில் இருப்பதால் போக்குவரத்து வசதி குறைவு. கோவில் கட்டடப் பொருள்களைக் கொண்டு வந்து சேர்க்க இரு மடங்கு செலவாகின்றது. அதேபோல மற்றைய பொருள்களைக் கொண்டு வருவதும் மிகவும் சிரமம். இந்தப் பொருட்களை திஸ்ஸமாராமையில் இருந்து இருமடங்கு வாகனக் கூலி கொடுத்து கொண்டு வந்தாலும்; கோவிலடிக்குக் கொண்டுவர முடியாது. றோட்டில் இருந்து கூலி ஆட்களை கொண்டு இருமடங்கு கூலி கொடுத்து மேலே கொண்டு வந்து சேர்க்க வேண்டும். இப்படியான சிரமங்களாலும் பக்தர்களின் நிதி உதவி மிகவும் குறைவு என்ற படியினுலும் வேலைகளும் முன்னேற்றமும் பின் அடைகிறது.

முருக பக்தர்கள் மனம்கோணுமல், நிதி உதவி செய்வார்களே! ஆனுல் கூடிய கெதியில் சகல வசதிகளும் செய்யலாம். றோட்டையும் செப்பனிட்டுத் தரும்படி அரசாங்கத்திடம் கேட்டிருக்கின்றோம்; அதுவும் கூடிய கெதியிலே முடியும். நாங்கள் முருகனை மனதிலே கோவில் கட்டி வணங்கும் பரம்பரை. வாரி வழங்குவோம்; அவன் புனித பூமியை நந்தவனம் ஆக்கி விடுவோம், அமர பூமி ஆக்கி விடுவோம், கண்டோர் மனதை கழிப்படையச் செய்யும் புனித பூமி ஆக்கிவிட நிதி உதவி புரிந்து வாழ்வில் இன்பம் அடைவோம். வாரீர் முருக பக்தர்களே! வேலவன் சந்நிதானத்திற்கு.

முருக பக்தர்களாகிய நாங்கள் திருப்பணிச் சபைத் தலைவர் அவர்களை மேலே வந்து கண்டு கதைத்து தேவையானதை கேட்டு அறியலாம். செல்லக் கதிர்காம முருகனே! எங்களில் இரங்கி இந்தப் பெரியாரைக் கொடுத்தார் என்ற நம்பிக்கையோடு அவர்களுடன் பழகலாம்.

வேண்டியவர்கள் முருகன் பெயரில் நேர்த்தி வைத்து வாழ்வில் இன்பம் அடையுங்கள். எத்தனையோ பக்தர்கள் ஆச்சரியப்படக் கூடிய தாக அருள் பெற்று இருக்கிறூர்கள் முருக பக்தர்களே, வீணர்களின் கதைகளைக் கேளாமல் வள்ளிபுன முன்னேற்றத்திற்கு உதவி புரிந்து உரிமை உள்ளவர்களாக அகம் மகிழ்ந்து செல்வோம்.

முருகன் அன்பர்களே!

மேலே குறிப்பிட்ட எங்கள் அருமைத் தலைவர் அடியார்களின் கிரகதோஷங்கள் நீங்க, நீங்காத நோய்கள் நீங்க, செய்வினை தோஷம் நீங்க, குடும்ப தகராறு நீங்கி சந்தோஷமாய் வாழ, தொழில் முன்னேற—வழக்கில் ஜெயம் அடைய கல்வியில் முன்னேற, சங்கீத ஞானம் பெற, இழந்த பொருட்களை திரும்பப் பெற்றுக் கொள்ள, பிள்ளை இல்லாக் குறை தீர—அதிசக்தி வாய்ந்த யந்திரம் முருகனின் பூசையில் வைத்து ஜெபம் செய்து தருவார்கள். வேண்டியவர்கள் பெற்று வாழ்வில் சந்தோஷம் அடையுங்கள். அன்பே! சிவம். ஓம்சாந்தி . . . ஓம்சாந்தி . . ஓம். சாந்தி . . . .

உ

முருகா

திருப்பணிச் சபைத் தலைவர் கௌரவ ஒக்கந்தையாய தேவானந்த தேரோ அவர்களின் உரை:

அன்புநிறைந்த முருக பக்தர்களே! வள்ளிநாயகியின் வரலாற்றை எத்தனையோ அடியார்களின் வேண்டுகோளின்படி பக்தர்கள் படித்தும் கேட்டும் இன்புற வேண்டும் என்றும், செல்லக் கதிர்காம வள்ளி புனத்தின் வரலாற்றை எங்கள் பாலைப் பரம்பரையும், படித்து, அறிந்து, முருக பக்தர்களாகி வாழ்வில் இன்பம் அடைய வேண்டும் என்ற பொது எண்ணத்தோடு, இந்த புனித சரித்திரத்தைப் பக்தர்கள் படித்து இன்புற சமர்ப்பிக்கின்றோம். அன்பர்களே! பல வருடங்களாக செல்லக் கதிர்காமத்தை தரிசிக்கும், பல அனுபவம் மிக்க அடியார்கள் எங்கள் மத்தியில் வாழ்கிறார்கள். இவர்களுக்குத் தெரியும். செல்லக் கதிர்காமம் பத்து வருடங்களுக்கு முன் எப்படி இருந்தது, இப்பொழுது எவ்வளவு முன்னேறி இருக்கிற தென்பதை, செல்லக் கதிர்காமம் பொறுப்பற்ற சிலரின் பொறுப்பில் இருந்தது அழிந்து போகும் அளவிற்கு பின்தங்கி இருந்தது.

பொதுமக்களின் உதவியோடு அரசாங்கத்திற்கு முறையீடு செய்து, எங்கள் பொறுப்பில் எடுத்து முருக பக்தர்களின் — அன்பான உதவியோடு, சாதி, மத, இட குல பேதம் இல்லாமல் இறைவன் பாத நிழலில், ஒன்றே குலம், ஒருவனே தேவன், என்னும் மனதோடு திருப்பணி புரிகிறோம். முருக பக்தர்கள், இந்த புனித ஸ்தல வளர்ச்சிக்கு மனம் கோணாமல் உதவி புரியலாம். இன்னும் மடங்கள் கட்ட, தண்ணீர் வசதி செய்ய, வெளிச்ச வசதி செய்ய, முருகன் கோவிலையும், வள்ளி அம்மன்

கோவிலையும், சமய முறைப்படி கட்டிட, உதவிபுரிந்து முருகன் பாத நிழலில் சகோதரர்கள் ஆவோம். வாருங்கள் பக்தர்களே! என்று இரு கைகளையும் நீட்டி வர வேற்கிறோம். இந்த புனித காவியத்தில் சொற் பிழை பொருட் பிழைகள் இருந்தால் தயவுசெய்து தெரியப் படுத்தினால் அடுத்த புத்தகத்தில் திருத்தி அச்சிட்டு வெளியிடுவோம். என்னை தவிர ஒருவருக்கும் அதிகாரம் இல்லை, அச்சிடவோ, வெளியிடவோ என்பதை அறியத் தருகிறேன். வணக்கம்!

ஓம் சாந்தி . . . ஓம் சாந்தி . . . ஓம் சாந்தி . .

இங்ஙனம்,

அன்புள்ள பக்தர்கள் தொண்டன்,

கௌரவ ஒக்கந்தையாய தேவானந்த சுவாமிகள்.

# வள்ளிநாயகியின் வரலாற்றுச் சுருக்கம்

நங்கையர் உலகின் மங்கையர் திலகம்!

கற்பினில் சிறந்த காவியத் தலைவி, உலகெல்லாம் வணங்கும் வேலவன் பத்தினி. மான் மகள் வள்ளிநாயகியை வணங்கி அவள் கதையைத் தொடங்குவோம். அன்பு தெய்வமே! சரணம் . . . சரணம் . . சரணம் அம்மா!

பக்தர்களின் உள்ளத்திலே கோவில் கட்டி அங்கேயே வணங்கும் எங்கள் மன்னவன் சண்முகன், பரமனின் நெற்றிக் கண்களில் இருந்து உதித்த பொழுதே, மாயனாய், கண்ணனாய், வாமனாய், ஸ்ரீராமனாய், மண்ணில் வந்து அவதரித்த திருமால் தன் கண்களில் இருந்து தன் மருகனுக்காக, சுந்தரவல்லி, அமரவல்லி, என்னும் இரு தெய்வக்கன்னிகைகளை உதிக்கச் செய்தார். இவர்கள் இருவரும், வெவ்வேறு இடத்தில் இருந்து முருகனையே அடைய வேண்டும் என்ற ஒரே எண்ணத்தோடு நாளும், பொழுதும் முருகனையே துதித்து வந்தார்கள்.

இப்படி இருக்கும் நாளில், முருகன் சூரபதுமனுடன் போர்புரிய வேண்டிய காலம் நெருங்கி விட்டது.

உமையவளும், தன் மைந்தன் பராக்கிரம சாலியும், மாயக்காரனுமாகிய, சூரபதுமனை வென்று அவன் ஆணவத்தை அடக்க சக்திவேல் தந்தும் விட்டாள்.

முருகன் தன் காதலிகள் இருவரினதும் முன் தோன்றி போர் முடிந்த பின்பே உங்களை நான் ஆட்கொள்வேன் என்றும்,

அமரவல்லியை இந்திரன் மகளாகவும், சுந்தரவல்லியை ஈழநாட்டின் தென்கோடியில் மாணிக்க கங்கைக் கரையில், வேடர் குலத்திலும் பிறக்கும்படி ஆணை இட்டார். அப்பொழுது சுந்தரவல்லி வணங்கி, நான் வேடர்க் குலத்தில் பிறக்க வேண்டுமா! சுவாமீ! என்று மனம் வருந்தினுள்.

அப்பொழுது மண்ணும், விண்ணும் செய்த தவப் பயனுல் உதித்த சிவஜோதிக்கனல், திருவாய் மலர்ந்தருளினுர்; நீ உன் தந்தையும் என் மாமனுமாகிய நீல வண்ணனிடம் முறை இடு என்று. அமரவல்லிக்கும் அதே மொழிந்தார். பின் இருவரும் திருமாலைத் தியானிக்க, மாயவனும் தரிசனம் ஆனுன்.

இருவரும் கண்ணனை வணங்கி திருமால் மருகோணின் கட்டளையை கூறினுர்கள்:

மாயோன் அஞ்சாதீர்கள் என அபயம் அழித்து, என் மருமகன் மனிதனுக்காக, பல திருவிளையாடல்களை என்னைப் போல் புரிந்து, மனிதனை ஈடேற்றும் நோக்கத்தோடு உங்களை உதவிக்கு அழைக்கிறுன் என்றுர்.

உடனே இருவரும் திருமாலின் கமலப் பாதங்களில் விழுந்து வணங்கி, எங்கள் பாக்கியமே பாக்கியம் என்று ஆனந்தக் கூத்தாடினுர்கள்.

அழைத்ததோர் குரலுக்கு வருவேன் என்று கீதையில் அருளிய கண்ணன். இருவரையும் மாங்கனி ஆக அருளி ஒன்றை இந்திரனின் பட்டத்து பெண் யானை முன் விழச் செய்தார்.

அதை உண்ட யானை கர்ப்பம் தரித்து, தெய்வானை அம்மனை ஈன்றது. இதை தேவர்க்கெல்லாம் அதிபதியாகிய இந்திரன் அறிந்து, திருமாலின் திருவிளையாடலே என்று உணர்ந்து, கண்ணும் கருத்துமாக, தன் தர்ம பத்தினி இந்திராணியிடம், கொடுத்து வளர்த்து வந்தான். பின் சுந்தரவல்லியாகிய மாங்கனியை, முருகவேள் குறிப்பிட்ட இடத்திற்கு திருமால் விட்டு எறிந்தார். அது மாணிக்க கங்கா தேவியின் கரையில் விழுந்தது. இவ்வாறு இருக்க.

மணிபுரியின் தென்கோடி வனம் மிகுந்த பகுதியாக இருந்தது. இந்த இடத்தில் மலை அடிவாரத்தில் ஒரு முனிவர் தவம் செய்து கொண்டு இருந்தார்.

மாணிக்க கங்கா தேவியில் குளித்து மகிழ ஆசை கொண்ட தேவ கன்னிகைகள், விண்ணுலகில் இருந்து மண்ணுலகம் வந்து குளித்து மகிழ்வார்கள். இப்படி இவர்கள் நீராடி ஆனந்தமாக போகும் பொழுது, ஒரு தேவகன்னிகை, மேற்சொன்ன முனிவர் தவத்தில் இருப்பதைக் கண்டு, அவரை சமீபித்து கேலி செய்தாள்.

உடனே முனிவர் கண்களைத் திறந்து, பெண் மானாகும்படி சபித்தார். தேவக்கன்னிகை விழுந்து விழுந்து புலம்பி மன்றாடி சாப விமோசனம் தரும்படி கெஞ்சி நின்றாள்.

முனிவர் பெண்ணே! உன் வயிற்றில் தெய்வமகள் ஒருத்தி சூரனுடன் போர்புரியும் முருகனுக்காகப் பிறப்பாள். அவள் பிறந்த பின் பழைய உருவில் நீ விண்ணுலகம் போவாய் என்றும், அப்பொழுது உனது சாபம் நீங்கும் என்றும் அருளினார்.

பின்பு இந்தப் பெண்மான், காட்டில் போய் புல் மேய்ந்து, மாணிக்க கங்கையில் நீர் அருந்தி, பொழுது சாயும் பொழுது முனிவரின் ஆச்சிரமம் அடைந்து விடும். இப்படியாக இருக்கும் நாளில், மாணிக்க கங்கையில் நீர் அருந்த சென்ற மான் கங்கைக் கரையில் இருந்த மாங்கனியை உண்டது. அதில் இருந்து மான் கர்ப்பம் தரித்து விட்டது. இது இவ்வாறிருக்க:

மாணிக்க கங்கையின் ஓரத்தில் வேடர் குடும்பங்களைக் கொண்ட விசாலமானதும், அழகானதும், ஆகிய கிராமம் இருந்தது. இந்தக் கிராமத்தை முருக பக்தனும், நீதியிற் சிறந்தவனும், ஆசார சீலனுமாகிய நந்தி என்னும் வேட அரசன் நீதி தவறாது பரிபாலித்து வந்தான். இவன் தன் குடிகள் நீதியோடு வாழ வேண்டும், முருக பக்தர்களாக இருக்க வேண்டும், என்ற எண்ணத்தோடு, முருக வணக்கத்தையும், தானியங்களை பயிர் செய்து உண்ண வேண்டும், குடும்பத்தில் ஒருவனே வேட்டையாட வேண்டும், என்ற நீதியை புகட்டி, அப்படியே வாழவும் செய்தான். அதன்படியே! அந்தக் காலத்தில் தினையும், குரக்கனும், சாமியும், வரகும், வள்ளிக்

கிழங்கும், தேனும், வேண்டிய அளவில் விளைந்த இடம் தான், பக்தர்கள், செல்லமாக அழைக்கும், வேலவன், எங்கள் வினை அகற்ற வந்த கலியுக வரதன், சிங்காரமயி லோன். ஈழமணி நாடு செய்த தவப்பயனால், அவன் செங்க மலப் பாதங்களை முதன் முதல் வைத்த செல்லக் கதிர்காமம் ஆகிய, பழைய கதிர்காமம்.

இப்படியாக குடிகளின் துக்கம் தன் துக்கம் என்ற எண்ணத்தோடு, பரிபாலித்த நந்தி அரசனுக்கும் அவன் தர்மபத்தினியிக்கும், புத்திர பாக்கியம் இல்லாமல் மிகவும் கவலையோடு, முருகனை எந்த நாளும் அவர்கள் குறை தீர வணங்கி வந்தார்கள். ஒருநாள் இரவு, நந்திராசன் கனவில் முருகன் தோன்றி, உனக்கு ஒரு பெண் குழந்தை கிடைப்பாள், அவள் எனக்காக உன்னி டம் வளரட்டும் என்று திருவாய் மலர்ந்து, மறைந்தான். நந்தி அரசன், தன் தர்ம பத்தினிக்கும் தான் கண்ட கனவை சொல்லி மகிழ்ந்திருந்தான். இவ்வாறு இருக்க.

கர்ப்பம் தரித்த தெய்வீக மான், புல் மேய்ந்து கொண்டு நந்திராசனின் வள்ளிச் சேனைக்குள் சென்று விட்டது. அந்த நேரம் வயிற்று நோக்காடு உண்டாகி, வள்ளிக்கிழங்கு தோண்டிய குழியை தன் காலால் பதப் படுத்தி, மிருதுவாக்கி, தன் வாயால், வள்ளி இலைகளை நிலத்தில் பரவி, தெய்வமகளை உலகுக் ஈந்தது.

குழந்தை மனித ரூபமும், மனிதக் குரலில், அழு வதையும் கேட்ட மான், வெருட்சி அடைந்து, பிள்ளையை சுற்றி, சுற்றி, நின்றது. சேனைக் காவலுக்காக நின்ற வேடரும், சேனையில் வேலை செய்து கொண்டு நின்ற வேடக் குமாரரும், குமாரத்திகளும், குழந்தையின் இனி மையான அழுகைச் சத்தத்தைக் கேட்டு, அந்த இடத்தை நோக்கி ஓடினார்கள். போய் பார்க்கும்போது பெண் மான் ஒன்று, குட்டி ஈன்ற அடையாளங்களோடு, மனிதக் குழந்தையின் அருகில் நிற்பதையும் கண்டு, ஆச்சரியப் பட்டார்கள். இவர்கள் நெருங்குவதைக் கண்ட மான், வெருண்டு ஓடியது. ஓடிய மான், கங்கையில் இறங்கிய வுடன், முனிவரின் சாபம் நீங்கி, தெய்வ கன்னிகை ரூபம் பெற்று முனிவரிடம் சென்று, வணங்கி என் கடமை முடிந்தது சுவாமீ! விடை அருளும் என்றாள். அப்பொழுது முனிவராக தவம் செய்து கொண்டு இருந்த நாரத முனிவர், தன் சுயரூபத்தைக் காட்டி, இதுவும் திரு விளையாடலே திருமாலின் திருவாய் மலர்ந்து, தெய்வ கன்னிகையுடன் விண்ணுலகம் சென்றார்கள்.

குழந்தையைக் கண்ட வேடர்கள், குழந்தையின் அழகையும், பிரகாசத்தையும், கண்டு கிட்ட நெருங்கப் பயந்து, தங்கள் அரசன் நந்தியிடம் சிலர் ஓடினார்கள். ஓடியவர்கள், அரசனைவணங்கி, அரசே! எங்கள் வள்ளிச் சேனையில் ஓர் அற்புதம் சுவாமீ! சொல்ல முடியாத அழகோடு ஒரு குழந்தையை ஒரு மான் ஈன்று விட்டு ஓடி விட்டது, என்றார்கள். உடனே நந்திராசன் தான் கண்ட கனவை தன் தர்மபத்தினிக்கு நினைவு கூர்ந்து, எல்லோ-ருமாக வள்ளிச் சேனைக்குச் சென்றார்கள்.

நந்தி அரசனும், அவன் தர்மபத்தினியும், குழந்தையின் அழகைக் கண்டு சற்று நேரம் மெய் மறந்து நின்றார்கள். அப்பொழுது குழந்தை அழுவதை நிறுத்தி, சுற்றும் முற்றும், பார்த்து, தன் செங்கமலப் பாதங்கள் கொண்ட கால்களையும், கைகளையும், உதைத்தும், ஆட்டியும், பவளவாய் திறந்து தன் மலர் சிரிப்பைக் காட்டியது.

உடனே நந்திராசன், வள்ளி! என்று அன்பு மேலீட்டால் அழைத்து தன் இரு கரங்களாலும் தூக்கி மார்போடு அணைத்து, உச்சிமோந்து, தன் தர்மபத்தினியிடம் கொடுத்தான். அவளும் தன் ஆசை தீர, மார்போடு அணைத்து, முத்தமிட்டு, தன் கணவனிடம் வள்ளி! என்று அழைத்தீர்களே! ஏன் என்றாள். அதற்கு நந்திராசன் வள்ளிக்கிழங்கு தோண்டி எடுத்த குழியில் கிடைத்த படியினால், வள்ளி! என்றேன் இன்று முதல் குழந்தையின் பெயர் வள்ளிதான். என்றான். பின்பு எல்லோருமாக நந்திராசனின் இல்லத்திற்குப் பிள்ளையை கொண்டு சென்று குழந்தையை முறைப்படி குளிப்பாட்டி, புதிய உடுப்பணிந்து, அழகிய தொட்டிலில் வளர்த்தி, தாலாட்டினார்கள். வேடக் குமாரத்திகள் கும்மி அடித்து பாடினார்கள். ஆண்கள் கரகம் எடுத்து ஆடினார்கள். நந்தி அரசனின் இல்லமே! விழாக்கோலம் பூண்டு எல்லோரும் ஆனந்தத்தில் மூழ்கி இருந்தார்கள்.

இதேவேளையில், நந்திராசன் முருகனை வணங்கி, நான் உண்மையான முருக பக்தன் என்றால், குழந்தை உமியும் பெருவிரலில் இருந்து, அது உணவு உண்ணும் வயசு வரும்வரை, பால் சுரக்க வேண்டும் என்று முருகனை வேண்டினான். அதேபோல், குழந்தைக்கும் அது உமியும் பெருவிரலில் இருந்து பால் சுரந்தது, பின் வள்ளியை கண்ணும் கருத்துமாக ஈ, எறும்பு, தொடமால் கண் மணிபோல் வளர்த்தார்கள். தங்கள் குலம் விளங்க வந்த திருமகளே! என்று போற்றி வளர்த்தார்கள்.

நந்திராசன், தன் சொந்த் குடும்பங்களில் இருந்து, வள்ளியின் வயசை ஒத்த பத்து பெண் குழந்தைகளை, தன்னோடு எடுத்து மிகவும் குணவதிகளாகவும், பக்தி உள்ளவர்கள் ஆகவும், வள்ளியின் தோழிகள் ஆவதற்காக வளர்த்தான். வள்ளியும் ஒரு குறையும் இன்றி, தன் தாய் தந்தையரை, மழலையால் மனம் மகிழ வைத்து வளர்ந்து கொண்டு வந்தாள். வேடக் குடும்பங்களில் உள்ள வயோதிபர்களும், பெண்களும், ஆண்களும், பிள்ளைகளும், வள்ளியை ஒருநாளாவது காணுமல் இருக்க மாட்டார்கள்.

அவ்வளவுக்கு எல்லோர் மனதையும், தன் மழலையாலும், அழகாலும், அன்பாலும், குறும்புத் தனங்களாலும், கவர்ந்து விட்டாள்.

வருடங்கள் செல்ல செல்ல வள்ளியும் வளர்ந்து கொண்டிருந்தாள். நந்திராசன், வள்ளிக்கு கல்வி கற்பித்தான். ஆடலும் பாடலும் சொல்லிக் கொடுத்தான். மற்றவர்கள் ஆச்சரியப்படக் கூடியதாக கல்வி அறிவிலும், பக்தியிலும், ஆடல் பாடலிலும், மேலாக விளங்கினுள்.

வள்ளி தன் தோழிகளோடு கங்கை கரை ஓரம் உள்ள சேனைக்குப் போவது, விளையாடுவது, மாணிக்க கங்கையில், கல்லில் பச்சை மஞ்சள் அரைத்து தோழிகள் கொடுக்க பூசிக் குளிப்பது, வீட்டில் பால் மாடுகளில் பால் கறப்பவர்களுடன் சேர்ந்து தானும் கறப்பது, பால் காய்ச்சுவது, தயிர் செய்வது, மோர் கடைவது சேவகர்கள் கொண்டு வரும் தேனை பக்குவப்படுத்துவது, தினைமாவு செய்வது, இப்படியான அன்றுட வேலைகளில் தோழிகளோடு பங்குபற்றிய நேரம் போக, மிகுதி நேரங்களில் முருகனை தேனும் தினைமாவும் நெய்யும் நைய்வேத்தியம் செய்து மலர் தூவி வணங்குவதில் காலம் கழிப்பாள்.

வள்ளிக்கும் வயது பன்னிரண்டு ஆகிவிட்டது. குழந்தைப் பருவம் போய், கன்னிப் பருவம் தொடங்கி விட்டது.

திருமகளும், கலைமகளும், ஒன்ருகி விட்டதுபோல கண்கவர் வனப்பு உள்ளவளாகவும், செவிக் கினிய தேன் போன்ற சொல்லை உடையவளாகவும், நறுமணம் உடையவளாகவும், காட்சி அளித்தாள். வள்ளி! இவைகளை

கவனித்த நந்திராசன், தன் மகள் தெய்வமகளே! என்பதை உணர்ந்து, தன் உதவியாளர்களை அழைத்து, யோசனை செய்தான்.

மாணிக்க கங்கை இரண்டு கிளைகளாக பிரிந்து ஒரு விசாலமான தீவைப் போல் விளங்கும், இந்த தினைப்புனத்தை தெரிந்து எடுத்தான்.

அந்தக் காலத்தில் எந்தக் காலத்திலும், இரண்டு கிளைகளாலும் நீர் ஓடி, பின் திரும்பவும் சொற்ப தூரத்தில் ஒன்றுசேரும். இந்தக் காலத்தில், மாரி காலங்களில் மாத்திரம், முன்போல் நீர் ஓடுகின்றது.

இந்தத் தினைப்புனம் அந்தக் காலம் இருந்ததிலும் பார்க்க, நீர் அரிப்பால் சிறுத்து விட்டது. அழகு குன்றி விட்டது.

நந்திராசன் மேற்கூறிய பிரகாரம் இந்த இடத்தை தெரிந்து எடுத்து, செப்பன் இட்டு, வேலி போட்டு, இதன் நடுவில் அழகான விசாரை அமைத்து, அதைச் சுற்றி, அழகிய முற்றங்கள் அமைத்து, முற்றத்தில் அழகிய பூசைக்குரிய நறுமணமுள்ள பூஞ்சோலை உண்டாக்கி, அந்தப் பூஞ்சோலையை சுற்றி பலவகை தானியங்களை, குறிப்பாக தினை விதைத்து, மாணிக்க கங்கை கரைகளில் சேனையைச் சுற்றி, வாழை, கமுகு, இன்னும் கனிதரும் மரங்களை நாட்டி, இதை தேவரும் மெச்சக்கூடிய அழகிய நறுமலர் சோலை ஆக்கினான்.

வள்ளி வணங்குவதற்காக, முருகன் கோவிலையும், பர்ண்ணசாலை ஓரமாக பூஞ்சோலைக்கு மத்தியில் கட்டினான். முருகனின் சிலையை அதில் பிரதிஸ்ட்டை செய்தான் முறைப்படி.

வள்ளியும், தோழிகளும், தினைப்புனத்தில் கிளி, குருவி, மையினை, கலைத்து விளையாட பறன் அமைத்துக் கொடுத்தான். வள்ளி—ஊஞ்சல் ஆடி விளையாட, ஊஞ்சல் அமைத்துக் கொடுத்தான்.

வள்ளி—தோழிகளோடு கும்மி அத்து விளையாட, மேடை அமைத்துக் கொடுத்தான்.

வள்ளி—கங்கையில் இறங்கி நீராடி விளையாட கருங்கல்லினால், படிகள் கட்டிக் கொடுத்தான்.

வள்ளி—பயமின்றி வாழ சேனையின் நாலா பக்கங்களிலும் காவற் குடிசைகள் கட்டி, வில்லும், அம்பும் ஏந்திய வேட்டுவ வீரரை காவல் வைத்தான்.

இப்படியாக நந்திராசன், தன் அருமை மகள் வள்ளிக்கு, ஒரு குறையும் இல்லாமல் செய்துவிட்டு தன் தர்மபத்தினியோடு, வள்ளியை அன்பாக அழைத்து, அருகில் இருத்தி, தலை தடவி, மகளே! நீயோ வளர்ந்து விட்டாய். எங்கள் குலத்தில் உனக்கு மணவாளன் இல்லை. பிள்ளை இல்லை என்று பரிதவித்த எங்களில், முருகன் இரங்கி, உன்னைத் தந்தான். இனி அவன் அருளால் தான் உன் வாழ்வு மலர வேண்டும். உனக்கு எல்லா வசதிகளும் உள்ள, எங்கள் தினைப்புனத்தை தெரிந்து எடுத்து, சகல வசதிகளும் கூடிய, பர்ண்ணசாலை அமைத்திருக்கிறேன்.

அதில் நீ உன் தோழிகளோடு ஒரு குறையும் இன்றி வாழலாம் மகளே! என்றான். வள்ளி மிகவும் சந்தோஷம் அடைந்து, தந்தையை புகழ்ந்தாள்.

பின்பு நந்திராசன், தன் மகளையும், மனைவியையும், தோழிகளையும், அழைத்துக் கொண்டு வந்து, இந்த இடத்தை சுற்றிக் காட்டினான். வள்ளியும், தோழிகளும், சேனையை சுற்றி, ஓடி உலாவி, இந்தினைப்புனத்தின் அழகை கண்டு மகிழ்ந்து, தந்தை தனக்கு செய்திருக்கும் சேவையைக் கண்டு, பின்பும் மெச்சி புகழ்ந்து, தாய் தந்தையரை வணங்கி நின்றாள், வள்ளி!

நந்திராசன், தன் மகளை ஆசீர்வதித்து, சுபநேரத்தில், பால் பொங்கல் இட்டு, முருகனுக்கும், தேவாலயத்தில், பூசை புரிந்து, வள்ளியையும், தோழிகளையும் குடிபுக வைத்தான்.

பின் வள்ளியும், தோழிகளும், பர்ண்ணசாலையில் உள்ள வேலைகளை செய்தும், கங்கையில் நீர் ஆடி, தினைமாவு, உருண்டைகளை மீன்களுக்கு உண்ணக் கொடுத்து, தோழிகளுடன் மகிழ்வதும், நறுமணம் உள்ள பூக்கள் எடுத்து, மாலை கோர்த்து, முருகனுக்கு சூட்டி வணங்குவதும், மான், மயில், வானரங்களுக்கு, உணவு கொடுத்து அவைகளோடு விளையாடி மகிழ்வதும், மாலை நேரங்களில் தோழிகளோடு கும்மி, அடித்து கீதம் இசைத்து மகிழ்வதும், காலை, மாலைகளில், சேனையில் பறன்களில் நின்று, கவண்

வீசி பறவைகள் கலைத்து மகிழ்வதும், சேனையைச் சுற்றி உலாவுவதும், ஒருவருக்கு ஒருவர் பரிகாசம் செய்து விளையாடி மகிழ்ந்து வாழ்ந்தார்கள், வள்ளி தினைப்புனத்தில்.

இவ்வாறு இவர்கள் வாழும் காலத்தில்,—முருகன், சூரபதுமனுடன், மலைகள் பொடிபட போராடி, அவனின் ஆணவத்தை அடக்கி, அவனை தன் சேவற் கொடியாகவும், மயில் வாகனமாகவும், ஆட்கொண்டான்.

இதன்பின் வானோர் துயர் தீர்த்த உமையாள் பாலன், பழனியில் பள்ளி கொண்டான். அப்பொழுது, சூரபதுமனின் கூட்டத்தில் இருந்த இடும்பன் என்னும் அசுரன், போர் செய்ய அஞ்சி, அகத்தியரிடம் சரண் அடைந்தான். அது சமயம், அகத்தியர் தான் தவம் செய்து சிவபிரானிடம் பெற்று, கோதாரத்தில் வைத்து விட்டு வந்த, சிவகிரி, சக்திகிரி, என்னும் மலைகளை, எடுத்து வரும்படி பணிக்கவே இடும்பனும் அங்கு சென்று அம்மலைகள் இரண்டையும் காவுதடியில் கட்டி தோளில் தூக்கி வந்தான். வரும்பொழுது, இளைப்பாறுவதற்காக தோளில் கொண்டுவந்த மலைகளை இறக்கி வைத்து, தானும் ஒய்வு எடுத்தான்.

மீண்டும் தன் பயணத்தை ஆரம்பிக்க, மலைகளை தூக்கும்போது, மலை அசையவில்லை. மலைமீது ஒரு சிறுவன் விளையாடுவதைக் கண்டு, முருகப் பெருமானாகிய சிறுவனை இறங்கும்படி கட்டளை இட்டான். சிறுவன் இறங்க மறுத்ததால், அவருடன் போர் செய்து மாண்டான். இடும்பன் மேல் வைத்த பெரும் கருணையால், மீண்டும் அவனுக்கு உயிர்கொடுத்து, தனது திருக் கோலத்தைக் காட்டி நின்றான்.

இடும்பன் மனம் மகிழ்ந்து, ஆனந்த கூத்தாடி, முருகக் கடவுளை வணங்குவதற்காகிய பொருள், இம் மலைகளில் இருப்பதனால், அகத்தியர், சொல்படி இம்மலைகளை காவுதடியில் கொண்டு செல்கிறேன் என்று சொல்லி செந்தினைமாவும், தேனும், நெய்யும், சேர்த்து தாமரை நூலால் திரித்த திரியால், தீபம் ஏற்றி முருகனுக்கு நைவேத்தியம் செய்ய,முருகனும் மகிழ்ச்சியோடு ஏற்றார்.

இதேபோல், இன்றைக்கும் நேர்த்திக்காக முருக பக்தர்கள் காவடி ஆடி, மாவிளக்கு எரித்து, தங்கள் மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவிக்கிறார்கள்.

முருகன் தாய் தந்தையாகிய பரமனையும், பார்வதியையும், அண்ணன் விநாயகனையும், தரிசிக்க கையிலைக்கு எழுந்தருளினார். அங்கே திருமாலும், நாரதரும், பிரசன்னமாக இருந்தார்கள். முருகன் தாய் தந்தையர், அண்ணன், மாமன், மாமுனி நாரதரையும் வணங்கி அமர்ந்தார்.

அப்பொழுது நாரதர் எழுந்து, வணங்கி, முருக வேலுக்கு நினைவு கூர்ந்தார், முருகனின் திருமணத்தைப் பற்றி.

முருகன்! அமிர்தவல்லி, சுந்தரவல்லிக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்ற திருவுள்ளம் கொண்டார்.

இதைத் தந்தையும் தாயும் அறிந்து, ஆசி கூறினார்கள். பின் கந்தன் நாரதரை தூது அனுப்பி, இந்திரன் மகள் தெய்வானையை மணம்புரிந்து இன்புற்று இருந்தான். தெய்வானையின் காதலில் கட்டுண்ட சண்முகன், வள்ளியை மறந்திருந்தான்.

திருமால் நாரதரை அழைத்து சுந்தரவல்லியாகிய வள்ளியை நினைவூட்டினார். நாரதர் நீலவண்ணனை வணங்கி, உடனடியாகத் திருத்தொண்டில் இறங்கி விட்டார்.

நாரதர் ஆகாய மார்க்கமாக வள்ளியின் தினைப்புனம் அடைந்தார். ஆகாயத்தில் நின்றபடியே, வள்ளி புனத்தின் அழகையும், வள்ளி தினைப்புனத்தில் தோழிகளோடு பறனில், வெள்ளிகளுக்குள் சந்திரன் போல் நிற்கும் அழகையும் கண்டு, ஆச்சரியமும் ஆனந்தமும் மடைந்தார். பின்பு நாரதர் தபசிரூபம் கொண்டு, மாணிக்க கங்கை கரையில் இறங்கி நீராடி, வள்ளி தினைப்புனம் சென்றார்.

வள்ளி தபசியைக் கண்டு வணங்கி, மான்தோல் ஆசனம் அளித்து, அமரச் செய்து தாகம் தீர மோரும் கொடுத்தாள். தபசி வள்ளியை ஆசீர்வதித்து, வள்ளியின் பூர்வீகம் தெரியாதவர் போல் நடித்து பெண்ணே! இந்த அழகான நந்தவனத்தில் வனதேவதை போல் காட்சி அளிக்கும் நீ யார்? என வினவினார்.

வள்ளி! நான் நந்தி அரசன் மகள் என்று மிகவும் பணிவோடு கூறி நின்றாள்.

மகளே! நீ மணம் முடிக்கும் காலம் வந்துவிட்டது. உன் அன்னை தந்தைக்கு உன்னை பற்றிக் கவலை இல்லை போலத் தெரிகிறது. நீ விரும்பினால், உனக்குப் பொருத்த மான ஆண் அழகன் என்னிடம் இருக்கிறான். பெயர் கதிரன், சூரியகிரணம் போல் ஒளிர்ப்பான், வீராதிவீரன், என்று வர்ணித்தார். உடனே வள்ளி, காதுகள் இரண் டையும் கைகளால் பொத்திக் கொண்டு, சுவாமீ! தாங் கள் போகலாம். எனக்கு மணம் முடிக்கும் எண்ணம் இல்லை. நான் முருகனின் அடியாள், என்று கூறி நின்றாள்.

நான் முனிசிரேஸ்டன் என்றால் என் கதிரனுக்கே! உன்னை மணம் முடித்து வைப்பேன், என்று சபதம் இட்டு சென்றார்.

வள்ளி மிகவும் மனம் வருந்தி முருகன் சன்னி தானத்திற்குச் சென்று கண்ணீர் வடிய வேலவனை தன்னை காப்பாற்றும்படி வேண்டி நின்றாள். பின்பு முருகன் தன்னைக் காப்பாற்றுவான் என்ற உறுதியோடு, அன்றாட காரியங்களில் ஈடுபட்டாள், தோழிகளுடன்.

வள்ளி தினைப்புனத்தில் நடந்த விஷயத்தை அறிந்து, நந்திராசன் தன் மனைவியுடன், மகளிடம் வந்து, நடந்த வற்றைக் கேட்டு அறிந்து, வள்ளிக்கு ஆறுதல் கூறி, காவல் செய்வோரையும் உசாராக இருக்கும்படி கட்டளை இட்டு, முருகன் கோவிலுக்குச் சென்று வணங்கிச் சென்றான்.

நாரத முனிவர், நேராக கைலைக்குச் சென்று முருகவேனைக் கண்டு வணங்கி. தாங்கள் சுந்தரவல்லிக்குக் கொடுத்த வாக்குறுதியை, நிறைவேற்றும் நேரம் வந்து விட்டது சுந்தரவல்லி வள்ளி என்னும் நாமத்தோடு, மணி புரியின் தென்கோடியில், மாணிக்க கங்கை கரையில், வேட அரசன் நந்திராசன் செல்ல மகளாக வளர்கிறாள். நான் அவளை, அவள் வாழும் தினைப்புனத்தில் கண் டேன். அந்த இடம் தினைப்புனமா! அல்லது குபேரனின் நந்தவனமா? தேவர்கள் வாழும் சுவர்க்க பூமியா! என்று சொல்ல முடியாத அழகோடு விளங்குகின்றது. அந்த சோலையின் நடுவில் சீதாபிராட்டிக்கு லட்சுமணன் அமை த்துக் கொடுத்த பர்ண்ணசாலையைப் போல, அழகான பர்ண்ணசாலை அமைத்து, பர்ண்ணசாலை அருகில், தேவ ரின் கோவில் கட்டி, வள்ளி தேவரை வணங்குகின்றாள். அவளின் அழகு இந்த உலகத்தையே சுற்றும் எனக்கே வர்ணிக்க முடியாமல் இருக்கின்றது. முழுமதி அந்த நந்த வனத்தில் இறங்கி உலாவுகின்றதோ என்று கூட ஆச்சரி யப் பட்டேன், சுவாமீ! என்றார் நாரதர்.

உடனே கந்தவேள் நாரதரே! இப்பொழுதே புறப் படுகிறேன். நான் புறப்பட்டதையும், வள்ளியின் கதை யையும் தெய்வயானைக்குப் பேச வேண்டாம். இரகசிய மாக இருக்கட்டும் என்றார்.

நாரதர், சுவாமீ! எனக்கோ இரகசியம் வைத்திருக்க முடியாது, முயல்கின்றேன் என்றார்.

கந்தன் தன் பவள வாய்திறந்து சிரித்து விட்டு, அண்ணன் விநாயகர் அருகில் இருந்ததையும் கவனி யாமல், புறப்பட்டு விட்டார். விநாயகரும் ஒன்றும் அறி யாதவர் போல, தலையை ஆட்டிவிட்டு இருந்து விட்டார்.

மாமயிலோன், மாமயில் மீது ஏறி, வள்ளி இருப் பிடத்தை நோக்கி வந்து மாணிக்க கங்கைக் கரையில் இறங்கினார். மாமயில், கங்காதேவியின் அழகைக் கண்டு நீராட விரும்பியது. கங்காதேவியும் பிரசன்னமாகி, முருகனை வணங்கி நீராடும்படி வேண்டி நின்றாள்.

வடிவேலனும் மகிழ்ந்து, மாணிக்க கங்கையில், மா மயிலோடு நீராடி மகிழ்ந்தார். பின்பு மயிலை அழைத்து கட்டளை இட்டார். அதோ! தெரியும் மலையில் போய் இரு. நான் அழைக்கும் போது வா! என்றார்.

மாமயிலும், மலை கிளம்பி வானத்தில் செல்வது போல் கிளம்பி, ஏழுமலைக்குப் போய் விட்டது.

பின்பு வேலவன், அழகு கொழிக்கும் வேட குமார னாக, வில்லும் அம்பும் கையில் எடுத்து, வேட்டையாடி வருபவர் போல் ஓடி வந்தார்.—காவல் காத்துக் கொண்டு நின்ற வேடன். ஏய்! அண்ணே! நில் என்று தடுத்தான். முருகன், அவனிடம் நெருங்கினார். காவல் வேடன் கந்தனின் அழகையும், உருவத்தையும் கண்டு மனம் பயந்தான். ஆனால், தன் பயத்தைக் காட்டாமல் இது நந்திராசன் மகள் வள்ளியின் தினைப்புனம், அங்கே கன்னிப் பெண்கள் இருப்பதால், உன்னைப் போல் வாலி பர்கள் போகக் கூடாது என்றான். முருகன் என்னைத் தெரியாதா! அண்ணே! நான் உனது குடும்பஸ்தன் என்று கூறி, அவனின் தகப்பன் பெயர், பாட்டன் பெயர், தாயின் பெயர், பாட்டி பெயர், மாமன்மார் பெயர், அவன் மனைவி பெயர், எல்லாம் வரிசையாகச் சொல்லி, சொந்தக்காரன் ஆகி விட்டார்.

பின்பு தான் கட்டி வந்த பலகாரப் பொட்டணத்தை அவிழ்த்து, ஒரு பலகாரம் எடுத்துக் கொடுத்தார் சாப்பிடும் படி. காவல் இருந்த வேடனும், சொந்தக்காரனைக் கண்ட ஆனந்ததில், பலகாரத்தை உண்டான். அண்ணே! இது அமிர்தம் போல் இருக்கின்றது. உன் பெண்டாட்டி சமைத்துக் கொடுத்தாளா! இன்னும் இருந்தால் தா அண்ணே! என் பெண்டாட்டி கர்ப்பம் தரித்து இருக்கிருள். கொண்டு போய் கொடுக்க ஆசையாக இருக்கிறது என்று வெட்கத்தோடு கூறினுன். முருகன் தன் முத்துச் சிரிப்பைச் சொரிந்து, அவனிடம் பொட்டலத்தைக் கொடுத்து இதை சாப்பிடு, நான் வேட்டையாடி வந்த மானை, இந்த சேனையில் பார்த்து வருகின்றேன். எனக்கு பெண்களைக் கண்டால் பிடிக்காது. நான் பிரமச்சாரி, என்னை நம்பு; அண்ணே! என்ருர். சரி, நீ! என் சொந்தக்காரன் என்ற படியினுல் நம்பி விடுகிறேன். பர்ண்ணசாலைப் பக்கம் தலை காட்டாதே! சீக்கிரம் வந்து விடு என்று கட்டளை இட்டு, வேட குமாரனுக வந்த முருகனை சேனைக்குள் விட்டான். முருகனும் சம்மதித்து மானைத் தேடி ஓடினுர்.

அப்பொழுது காலை நேரம் காலை கதிரவனின் ஒளி பட்டு தினைப்புனம் பொன் மயமாக விளங்கியது. ஒரு பக்கத்தில் நறுமணம் கமழும் மலர்சோலை, ஒரு பக்கத்தில் தேன் ஒழுகும் கனிகளைக் கொண்ட கனிதரும் மரங்கள், கனிகளைப் பறித்து உண்ணும் வானரங்களின் குறும்புகள், புள் இனங்களின் குரல் ஓசை, மறுபக்சத்தில் முற்றி விளைந்த பொன்மயமான கதிர்களைக் கொண்ட தினைச் சேனை. நந்தவனத்தின் மத்தியில் இலுக்கினுல் வேய்ந்த பர்ண்ணசாலை, இது சூரிய ஒளிப்பட்டு பொன் தகடு போர்த்தது போல் விளங்கியது. தினைச் சேனையின் ஒரு பக்கத்து பறனில் முழு நிலவு இறங்கி நிற்பது போல் வள்ளி தேனிலும் இனிய குரலில் ஆலோலம் பாடி கிளி குருவிமையினு கலைத்துக் கொண்டு நின்ருள்.

இவைகளை எல்லாம் பார்த்து மகிழ்ந்த வேலவன் வள்ளியின் அழகிலும், குரலின் இனிமையிலும் மயங்கி வள்ளி நின்ற பறன் அருகில் சென்று வள்ளியைப் பார்த்த பார்வையாகவே நின்ருன்.

வள்ளி முருகனை கண்டுவிட்டாள். ஒரு கணம் திகைத்து நின்ருள். இப்படியும் ஒரு ஆண் அழகன் உலகத்தில் இருக்கிருனு! என்று தன் மனத்திற்குள் ஆச்சரியப்பட்

டாள். வள்ளி பறனை விட்டு இறங்கி, இங்கே பெண்கள் இருக்கும் இடத்தில் உமக்கு என்ன வேலை காவல்களை மீறி எப்படி வந்தீர் என்று கேட்டாள்.

அதற்கு முருகன் பெண்ணே நான் மலை அடிவாரத்தில் இருப்பவன் என் பெயர் கதிரன் நான் வேட்டையாடி வந்தேன் வேட்டையாடி வந்த மான் இங்கே வந்து விட்டது என்று சொன்னார்.

வள்ளி அப்படியான மான் இங்கே வரவில்லை. நாங்கள் வளர்க்கும் மானைத் தவிர வேறு மான் இங்கே இல்லை நீர் போகலாம் என்றாள்.

முருகன் பெண்ணே! என்னை அறியாமலே உன் அழகு என்னைக் கவர்ந்து விட்டது உன்னை மணம் புரியா விட்டால் என்னுயிர் போய்விடும் என்றார். உடனே வள்ளி மிகவும் கோபம் கொண்டு தன் தோழிகளை அழைத்து இவனை இங்கிருந்து விரட்டி விடுங்கள் என்று கட்டளை இட்டாள்.

கந்தனின் திரண்ட புயங்களும், பரந்த மார்பும், பால்வடியும் முகமும், வீரன் மட்டும் அல்ல அழகன் என்பதையும் பறைசாற்றியது. தோழிகள் கிட்ட நெருங்கப் பயந்தார்கள். தோழிகளில் ஒருவள் ஓடிச் சென்று காவல் செய்வோரை, வேலா! ரெங்கா! சூரா! என்று உரக்கக் கூவி அழைத்தாள், ஆபத்து, ஆபத்து என்று.

காவல் செய்தோர் நாலா திசைகளிலும் இருந்து அம்பு வில்லு சகிதம் ஓடி வந்தார்கள்.

வேலவன் உமையாள் பாலன் உடனே (வேங்கை மரமாக) ராஸ்சதவிருச்சமாக நின்றார். ஓடி வந்த வேடரிடம் வள்ளி விருச்சத்தை காட்டினாள்.

உடனே நந்தி அரசனுக்கு தூது அனுப்பி, அரசனும் சேனைகளும் வந்து விட்டார்கள். நடந்தவற்றை வள்ளி கூறினாள்.

நந்திராசன் அந்த விருச்சத்தை வெட்டி எறியும்படி தன் சேனைக்குக் கட்டளை இட்டான். அவர்களில் சிலர் கொடரி கொண்டு வெட்டினார்கள். அப்பொழுது நிலம் அதிர்ந்து மரமும் ஆடி சலசலத்து வெட்டு வாயால் இரத்தம் சீறி ஆறாகப் பாய்ந்தது. வெட்டியவர்கள் அரு

கில் நின்றவர்கள் அனைவரும் இரத்தத்தால் தோய்ந்து விட்டார்கள். இதைக் கண்ட நந்தி அரசன் ஆச்சரியப் பட்டு வெட்ட வேண்டாம் என்று தடுத்து, வள்ளி இடம் சொன்னான்: இது நல்ல நிழல் மரமா இருக்கின்ற படியினால் இங்கேயே நிற்கட்டும் என்று கூறி, இன்னும் காவலை அதிகமாக்கி, மகளுக்கும் ஆறுதல் கூறி வள்ளியின் கோவிலுக்குச் சென்று முருகனை வணங்கி தன் மகளைக் காத்தருளும்படி வேண்டி தன் இருப்பிடம் சென்றான்.

வள்ளியும் முருகன் சன்னிதியில் காப்பாற்றும் படி வேண்டி நின்றாள்.

கந்தன் பழையபடி வேட குமாரன் உரு எடுத்து உன்னையே மணம் முடிப்பேன் என்று சபதம் இட்டார். வள்ளி தன்னை முருகன் கை விடான் அவனை அன்றி ஒரு ஆடவரையும் மனதாலும் தீண்டேன் என்று கூறி பர்ண்ணசாலைக்குள் சென்று விட்டாள்.

வேலவன் தனக்குள் சிரித்துக் கொண்டு கொஞ்சத் தூரம் போய் மறைந்து விட்டார்.

வேலவன் அனுப்பிய மாமயில் மலைக்குச் சென்றது. மலை உச்சியில் தனக்கு ஆடிக்கழிக்க இடம் இல்லாத படியினால் அதன் பலம்மிக்க கால்களால் மலை உச்சியைக் கிளறி கற்பாறைகளை உருட்டி மட்டமாக்கி ஆடிக் கொண்டு இருந்தது. அங்கே சென்ற முருகன் மாமயிலைப் புகழ்ந்து இதுவும் எனது இருப்பிடம் ஆகும் என்று திரு வாய் மலர்ந்தார்.

வள்ளி தினைப்புனத்தில் நடந்த விஷயம் வேடர் எல்லோரும் அறிந்து நந்தி அரசனிடம் வந்து தாங்கள் ஊர் எல்லைகளில் காவல் வைத்திருக்கிறோம் பயப்படத் தேவையில்லை என்று அரசனுக்கு ஆறுதல் கூறினார்கள்.

பின்பு கந்தவேள் முற்றாக நரைத்த வெண்தாடி முடியோடு மிகவும் வயது சென்ற வயோதிபராகி கோல் ஊன்றிக் கொண்டு நந்திராசன் இல்லம் சென்று சம்போ மகாதேவா என்று உரக்க கூறிகின்றார். நந்தி அரசன் ஓடிவந்து பெரியவரை வணங்கி வீட்டிற்குள் அழைத்து சென்று இருக்க ஆசனம் அளித்து தன் தர்மபத்தினி யோடு வணங்கி நின்றான்.

பெரியவர் நான் பல தலங்களை தரிசித்துக் கொண்டு வருகிறேன். மாணிக்க கங்கையில் நீராட ஆசை கொண் டேன் இப்படியே வந்தேன் என்றார்.

நந்திராசன் மனம் மகிழ்ந்து பல வகைகளாலும் உபசரித்து தன் மகள் வள்ளியை பெரியவருக்கு அறிமுகப் படுத்தி வைக்க தினைப்புனம் அழைத்து வந்தான்.

பெரியவருக்கு வள்ளியை அறிமுகப்படுத்தினான். வள்ளி பெரியவரை வணங்கி அமர ஆசனம் அளித்து நின்றாள். நந்திராசன் பெரியவரிடம் தினைப்புனத்தில் நடந்த கதையையும் சொன்னான். சொல்லி இந்த ஆபத்துக்களால் முருகன்தான் காப்பாற்ற வேண்டும் என்று பெருமூச் செறிந்தான்.

பெரியவர் அஞ்சவேண்டாம் என்று கூறி வள்ளியின் கையை நீட்டும்படி சொன்னார். உன் தலைவிதி எப்படி இருக்கிறது என்று பார்ப்போம் என்றார். வள்ளியும் தன் கையை நீட்டினாள் பெரியவரும் கையைப் பார்த்து சாஸ்திரம் கூறினார். பின் ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். முருகன் அருள்புரிவான் என்று ஆறுதல் கூறினார்.

நந்திராசன் பெரியவரை வள்ளிக்குத் துணையாக சில நாட்கள் இருக்கும்படி வேண்டினான். பெரியவரும் ஒப்புக் கொண்டார்.

நந்திராசன் போனபின் பெரியவர் வள்ளியை நோக்கி எனக்கு அகோரப் பசியாக இருக்கின்றது புசிக்க ஏதாவது தருவாயோ என்று கேட்டார். வள்ளி உடனே தேனும் தினைமாவும் தேக்கம் இலையில் வைத்து பெரியவரை உண்ணும்படி கொடுத்தாள். பெரியவர் அதை குழப்பி வள்ளியின் கையால் ஊட்டும் படி வள்ளியிடம் கேட்டார். வள்ளி அதை நன்றாக குளப்பி பெரியவரின் நடுங்கும் கைய்யில் வைத்தாள். பெரியவர் உண்ணும் போது விக்கல் எடுத்துவிட்டது. பெரியவர் வள்ளி! என் உயிர் போகிறது தண்ணீர் தா என்று கத்தினார். வள்ளி தண்ணீர் குடங்களைப் பார்த்தாள் தண்ணீர் குடங்களில் முருகனின் மாயையால் தண்ணீர் இல்லை. பெரியவரிடம் ஓடிவந்து தண்ணீர் அருந்த ஓடைக்கு வரும்படி கை தடியைப் பிடித்து கூட்டிப் போனாள். பெரியவரும் வள்ளியின் பின்னால் சென்று படிக்கட்டுகளில் இறங்கி ஓடையில் இறங்கி நீர் அருந்தும்போது அருவியில் விழுந்து நன்றாக நனைந்து விட்டார். வள்ளி மிகவும் சிரமப்பட்டு பெரியவரின் உடம்பை தொடாமல் மேலே கூட்டி வந்தாள்.

பின் சேனைக் காவலுக்குச் சென்ற தோழிகள் வந்து விட்டார்கள். பின்பு எல்லோரும் வள்ளியோடு கங்கையில் நீராடி மலர் பறித்து மாலை கோர்த்து முருகனுக்கு சூட்டி வணங்கினார்கள்.

பெரியவர் தங்குவதற்கும் இடம் ஒழுங்கு பண்ணிக் கொடுத்தார்கள். பெரியவரிடம் பல புத்திமதிகளைக் கேட்டும் உபகதை கேட்டும் ஆனந்திப்பார்கள். இரவில் நிலா வெளிச்சத்தில் வள்ளி தோழிகளோடு கும்மி அடித்து மகிழ்வாள். இவர்களின் ஆட்டங்களுக்குத் தக்கபடி பாடுவார் அவர்களுடன் சேர்ந்து ஆடுவார். இப்படி வள்ளியையும் தோழிகளையும் பல விதத்தாலும் ஆனந்தப் படுத்திக் கொண்டு கொஞ்ச நாள் வள்ளியுடன் இருந்தார்.

மலையில் இருந்த மயிலுக்கு முருகனை வணங்காமல் இருக்க முடியவில்லை. தன்னுடைய பலமான கூரிய சொண்டால் கல்லில் வேல் ஒன்று கொத்தி எடுத்து மலையின் உச்சியில் வைத்து வணங்கி வந்தது.

தினைப்புனத்தில் வள்ளியுடன் இருந்த பெரியவர் வள்ளியை ஆட்கொள்ளத் திருவுள்ளம் கொண்டு தோழிகள் சேனைக் காவலுக்குச் சென்றபின் வள்ளி! நீ என்ன மிருகத்திற்குப் பயப்படுவாய் என்று கேட்டார். வள்ளி தன் அழகு முல்லைச் சிரிப்பைக் காட்டி நான் யானைகளுக்குத்தான் பயம் அவைகளின் பிளிறல் சத்தம் கேட்டால் எனக்கு குலை நடுக்கம் என்று கூறினாள்.

உடனே கரிமுகன் தம்பி தன் அண்ணன் விநாயகனிடம் சொல்லாமல் வந்ததை எண்ணி மனம் வருந்தி அண்ணனை மன்றாடி அழைத்தார். கரிமுகன் கணப்பொழுதில் தன் தம்பி அழைத்ததை அறிந்து ராட்சத யானை உருக் கொண்டு மிகவும் நீண்ட வெண்கொம்புகளுடன் வனம் பொடிபட நிலம் அதிர கங்கை கலங்க பிளிறிக் கொண்டு தினைப்புனம் புகுந்து அட்டகாசம் செய்தார்.

வள்ளி இதை கண்டு மிகவும் பயந்து பெரியவரிடம் போய் காப்பாற்றும் படி வேண்டினாள். பெரியவராகிய முருகன் வள்ளி! இப்பொழுது ஆவது என்னை கல்யாணம் செய்வாயா என்று கேட்டார். வள்ளி மறுத்து என்ன வந்தாலும் சரி என்று முருகனைத் தியானித்துக் கொண்டு முழங்காலில் நிலத்தில் கண்களை மூடி இருந்தாள். அப்பொழுது விநாயகர் மறைந்து விட்டார்.

முருகன் தன் சுயரூபத்தைக் காட்டி வள்ளி! கண்ணைத் திறந்து பார் என்று திருவாய் மலர்ந்தார். கணீர் என்ற ஓசை கேட்டு வள்ளி கண்களைத் திறந்து பார்த்தாள். முருகன் ஆயிரம் சூரியப் பிரகாச ஒளியுடன் வேலாயுதம் தாங்கி புன்சிரிப்போடு நின்றார். வள்ளி அகமகிழ்ந்து மெய்மறந்து முருகனின் பாதங்களைத் தொட்டு வணங்கி நின்றாள். முருகன் தன் இரு கரங்களையும் நீட்டி வள்ளியை தன் அருகில் அணைத்துக் கொண்டார். வள்ளியும் இன்னும் புதுப் பொலிவோடு புது மணப்பெண் போல் காட்சி அளித்தாள்.

யானையின் அட்டகாசத்தை கண்ட வேடர்களும் வள்ளியின் தோழிகளும் நந்திராசனிடம் ஓடிச் சென்று அரசே நாங்கள் எங்கள் பிறப்பில் காணாத ராட்சத யானை ஒன்று தினைப்புனம் புகுந்து அட்டகாசம் செய்கின்றது வள்ளியும் பெரியவரும் என்ன ஆனார்களோ! தெரியாது என்று புலம்பினார்கள்.

நந்திராசனும் சேனையும் அம்பு வில்லு ஈட்டி சகிதம் தினைப்புனம் விரைந்தார்கள். அங்கே நந்திராசன் கண்ட காட்சி சொல்லால் வர்ணிக்க முடியாது. பரமனும் பார்வதியும் ஒன்றாய் காட்சி கொடுத்தது போல் வள்ளியும் முருகனும் சோடியாக நின்று காட்சி கொடுத்தார்கள்.

நந்திராசன் வில்லம்மை நிலத்தில் போட்டு எல்லோரையும் வணங்கும்படி ஆணையிட்டு தானும் வீழ்ந்து வணங்கினான்.

தேவர்கள் பூமழை பொழிய சிவலோக நாதனும் உமையவளும், திருமாலும், நாரதரும், விநாயகரும் வாழ்த்த மாணிக்க கங்கை நீரால் தன் மகள் வள்ளியை நந்திராசன் முருகனுக்குத் தாரை வார்த்துக் கொடுத்தான்.

பின் பிள்ளையார் சுயரூபத்தில் காட்சி கொடுத்து நின்றார். வள்ளியும் முருகனும் வணங்கி நின்றார்கள். விநாயகர் இருவரையும் வாழ்த்தி தன் தம்பி கதிரன் என்ற பெயருடன் வள்ளியின் காதலுக்காக வந்தபடியினால் கதிர்காமம் என்று இன்றுமுதல் வழங்கட்டும் என்றும், மாணிக்க கங்கை கந்தனின் திருவிளையாடலில் முக்கிய இடம் வகித்தபடியினால் இன்றுமுதல் மனிதனின் பாவத்தை, நோயைத் தீர்க்கும் புனித கங்கை ஆகட்டும் என்று திருவாய் மலர்ந்தார்.

இன்றைக்கும் மாணிக்கப் பிள்ளையார் செல்லக் கதிர் காமத்தில் வள்ளியையும் முருகனையும் வாழ்த்திக் கொண்டும் தன்னை வணங்க வரும் பக்தர்களையும் வாழ்த்திக் கொண்டு வள்ளி புனத்தைப் பார்த்துக் கொண்டே எழுந்தருளி இருக்கிறார்.

முருகன் தன் வாகனமாகிய மாமயிலை அழைத்தார். மாமயில் அம்புபோல் அவரிடம் வந்து வள்ளியையும், முருகனையும் வணங்கி ஆனந்தமிகுதியால் தன் நீண்ட தோகையை விரித்து ஆடியது.

முருகனும் அன்போடு விதன் முதுகைத் தடவிக் கொடுத்து மகிழ்ந்தார்.

முருகன் நந்திராசனை அழைத்து மாமயிலோடு உன் சேனையை அனுப்பி மயில் மலை அடிவாரத்தில் இருந்து மலை உச்சிக்கு பறந்துபோகும் அடையாளத்தை பிடித்து பாதை செப்பனிட்டு மேலே போய் மலையின் உச்சியில் பர்ண்ணசாலை ஒன்று அமைக்கும்படி திருவாய் மலர்ந்தார்.

அதன்படி நந்திராசன் தெரிந்து எடுத்த வீரர் பலர் மாமயிலோடு சென்றார்கள். மலையின் அடிவாரத்திற்குச் சென்ற வீரர்கள் மாமயில் பறந்து மலை உச்சியை அடைந்த அடையாளத்தை பிடித்து பாதை செப்பனிட்டுக் கொண்டு சென்றார்கள். மலையின் நடுப்பகுதிக்குச் சென்ற போது, பிள்ளையார் பிராமண வயோதிபதி ரூபத்தில் அமுதும் நீரும் கொடுத்து அவர்களுக்கு ஆறுதல் அளித்தார்.

அதுதான் போலும் இன்றைக்கும் பிள்ளையார் மலையில் இடையில் இருந்து கொண்டு தன் அருமை தம்பியைத் தரிசிக்கப் போகும் பக்தர்களை இளைப்பாற்றி ஆசி கூறி அனுப்புகிறார்.

பின்பு மலை உச்சியை அடைந்த வீரர்கள் மயிலின் திறமையைக் கண்டு மெச்சி மாமயிலின் வேலை வணங்கி உடனடியாக திருத்தொண்டில் இறங்கி வானோரும் புகழக்கூடிய பர்ண்ணசாலையை காண்போர் உள்ளம் கொள்ளை கொள்ளும் அளவிற்கு அழகாக அமைத்தார்கள். மாமயில் ஆனந்த மிகுதியால் தன் தோகையை விரித்து ஆடி நந்திராசனின் சேனைக்கு நன்றி தெரிவித்தது.

பின்பு இவர்கள் மலையை விட்டு இறங்கி வந்து நந்திராசனிடம் சென்று மலையில் நடந்ததை கூறி மகிழ்ந்தார்கள். நந்திராசன் மிகவும் மனம் மகிழ்ந்து கந்தனிடம் சென்று வணங்கி சுவாமீ! பர்ண்ணசாலை அமைத்து விட்டார்கள் எனது சேனையில் உள்ளவர்கள் என்று கூறி நின்முன்.

முருகன் மனம் மிக மகிழ்ந்து நந்திராசனை வாழ்த்தினார்.

பின்பு வள்ளியின் தோழிகளும் கூட்டத்தாரும் நந்திராசனும் பலவிதத்தாலும் முருகனையும் வள்ளியையும் ஆனந்தப்படுத்தினார்கள். கரகம் ஆடினார்கள். காவடி எடுத்து ஆடினார்கள். பாட்டுப் பாடி கும்மி அடித்தார்கள். வள்ளியையும் முருகனையும் மலர் ஊஞ்சலில் இருத்தி ஊஞ்சல் ஆட்டி இனிமையான கீதழ்கள் இசைத்தார்கள்.

நந்திராசனின் குடிமக்கள் பல வகை தானியங்களும் தேனும் கிழங்கு வகைகளும் தயிரும் நெய்யும், வள்ளிக்கும் முருகனுக்கும் பட்டு சேலைகளும் பட்டுப் பீதாம்பரமும் வேட்டிகளும் கொண்டு வந்து மாணிக்க கங்கையில் நீராடி புதிய உடை அணிந்து — முருகனுக்கும் வள்ளிக்கும் தங்கள் அன்பு காணிக்கை செலுத்தி வணங்கி நின்றார்கள். வள்ளி தினைப்புனம் பார்ப்போர் மனதை கவரக் கூடியதாக அலங்கரிக்கப்பட்டு இருந்தது.

இதே வழக்கம் இன்றைக்கும் செய்கிறார்கள். நேர்த்திக்காக சிங்கள மக்கள் வள்ளி அம்மனுக்கு சேலை காப்பு சங்கிலி முதலியவைகளும், கந்தனுக்கு வேட்டி சால்வையும் தங்கள் நேர்த்தி நிறைவேறிய சந்தோஷத்தில் செல்லக் கதிர்காம வள்ளி மணாளனுக்கும் வள்ளிக்கும் அன்பு காணிக்கையாக கொடுத்து மகிழ்கிறார்கள். அதே போல காவடி ஆட்டம் முதலியன ஆடி கந்தனையும் மகிழ்விக்கிறார்கள்.

முருக பக்தர்களாகிய நாங்களும் செல்லக் கதிர்காம சக்திவேல் குமரனையும், குமரியையும் மகிழ்விக்க இதே மாதிரி காணிக்கைகளை கொடுத்து வாழ்க்கையில் நீங்காத துயர் நீங்கி மகிழ்வோடு வாழ்வோம்.

எத்தனையோ பக்தர்கள் வள்ளிநாயகியின் அருளால் நீங்காத நோய் துயர் நீங்கி வாழ்வு மலர்ந்திருக்கிறார்கள்.

முருக பக்தர்களாகிய நாங்கள் வள்ளி அம்மையாரை முதல் இடம் கொடுத்து வணங்க வேண்டும். அந்த தெய்வமகளின் அருளால்தான் முருகன் எங்களுக்குக் கிடைத்தான். முருகன் முதல்முதல் காலடி வைத்த இடம் செல்லக் கதிர்காமம் ஆகிய பழைய கதிர்காமம். ஆனபடியால் முருக பக்தர்கள் செல்லக் கதிர்காமத்தைத் தவருமல் தரிசித்து அருள் பெறுவார்கள்.

பின்பு முருகனும் வள்ளியும் மாணிக்க கங்கையில் நீராடி மீன்களோடு விளையாடி மகிழ்ந்தார்கள்.

பால் நிலாவில் வெண்குருதி மணலில் வள்ளியின் கூந்தல் நடனமிட முருகனேடு ஓடி விளையாடி மகிழ்ந்தாள். பளிங்கு பாறைகளில் தேன்நிலவில் இருந்தும் நடந்தும் காதல் கீதங்கள் இசைத்தார்கள். முருகனின் குறும்புத்தனங்களில் மகிழ்ந்த வள்ளி நாணத்தோடு கன்னம் சிவக்க முத்தாரம் போல் சிரிப்பாள். பின்பு முருகனும் வள்ளியும் மாமயில் மீது ஏறி ஆகாய வெளியில் சஞ்சரிப்பார்கள். மலையில் போய் இறங்கி தேன் நிலவைக் கழிப்பார்கள். மலைக்கு மலை ஓடி விளையாடுவார்கள். இப்படியாக வள்ளியும் முருகனும் மகிழ்ந்து வரும்பொழுது.

முருகனைக் காணுது தெய்வயானை மனம் வருந்தி நாரதரை அழைத்து வினவினுர். நாரதர் தெய்வானையை வணங்கி நடந்ததை ஆதியோடு அந்தமாக சொன்னுர். தெய்வானை தன் மணுளன் குறக் குடும்பத்தில் பெண் எடுத்துவிட்டார் என்று கவலைப் பட்டார்.

நாரதர் தெய்வானையை வணழ்கி தாயே! வள்ளி குறத்தி அல்ல குறக் குடும்பத்தில் வளர்ந்தபடியினுல் குறத்தியானுள்—வள்ளி உங்கள் சகோதரியாகிய சுந்தரவல்லியே முருகனின் திருவிளையாடலில் பங்குகொள்வதற்காக உங்கள் தந்தை ஆகிய திருமாலின் அருளால் மானின் வயிற்றில் ஈழமணி நாடு செய்த தவப்னயனுல் பிறந்தாள் என்று கூறினுர். ஆனுலும் முருகனை விட்டு இருக்க முடியாத தெய்வயானை முருகனின் பிரிவால் மனம் வருந்தி முருக பக்தனுகிய முத்துலிங்க சுவாமிகளை முருகனை அழைத்து வரும்படி கதிர்காமத்திற்கு அனுப்பினுர். முத்துலிங்க சுவாமிகள் ஆகாய மார்க்கமாக கதிர்காமம் நோக்கி வந்து செல்லக் கதிர்காம வள்ளி திணைப்புனத்

திற்கு அருகாமையில் மாணிக்க கங்கை கரையில் இறங்கி, மாணிக்க கங்கையில் நீராடி முருகனை வணங்கி, தன்னுடைய சக்திமிக்க யந்திரத்திற்குள் முருகனை அடக்கி பேழையில் வைத்துக் கொண்டு சென்றார்.

அந்த நேரம் தினைப்புனத்தில் பர்ண்ணசாலையில் இருந்த வள்ளி அம்மனுக்கு முருகன் தன்னை விட்டுப் மெள்ளமெள்ளப் போவது போல் தோன்றியது.

வள்ளி முத்துலிங்க சுவாமிகளுக்கு முன் தோன்றி தனக்கு மாங்கல்யப் பிச்சைத் தரும்படி வேண்டி நின்றார். சுவாமிகளும், தீர்க்க சுபமங்கிலியபவா என்று ஆசீர்வதித்தார்.

அப்பொழுது வள்ளி முருகனை அடக்கிய யந்திரத்தைத் தரும்படி இரந்து கேட்டார்.

முத்துலிங்க சுவாமிகளுக்கு ஒன்றும் செய்ய முடியாமல் அதே இடத்தை பரிசுத்தம் ஆக்கி யந்திரப் பேழையை மேடையில் வைத்து குடிசை கட்டி தானும் முருகனுடன் இருந்து வணங்கி வந்தார். முத்துலிங்க சுவாமி யந்திரம் ஸ்தாபித்து பூசை செய்த இடம்தான் பெரிய கதிர்காமம்.

முருக பக்தர்களே! எங்கள் ஈழமணி நாடு செய்த தவப்பயனால் உதித்த வள்ளிமாதா, இல்லாவிட்டால் முத்துலிங்க சுவாமிகள் முருகனை திரும்பவும் தெய்வானை அம்மனியிடம் கொண்டு போய் இருப்பார். எங்களுக்கு முருகனை தந்த வள்ளி மாதாவை மறவாமல் அவள் வளர்ந்த முருகனை மணம் புரிந்த புனித பூமியாகிய செல்லக் கதிர்காமத்தைத் தரிசித்து எங்கள் மாதாவின் அருளைப் பெறுங்கள்.

பின்பு தெய்வானை அம்மன் விநாயகரிடம் சென்று வணங்கி நின்றார். விநாயகர் தெய்வானை அம்மனை அழைத்துக் கொண்டு முருகனிடம் கதிர்காமம் எழுந்தருளினார். பின்பு விநாயகரும் தெய்வானை அம்மனும் முத்துலிங்க சுவாமியின் வேண்டுகோளின்படி இங்கேயே கோவில் கொண்டார்கள்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

# திருப்புகழ்

அருணகிரிநாதர் என்பவர் ஒப்பில்லா முருக பக்தர். இவர் திருவெண்ணுமலையில் இருந்து கதிர்காமத்தைத் தரிசிக்க வந்தார். கதிர்காம கந்தனில் கொண்ட மாருத அன்பினுல் திருப்புகழ் பாடிச் சென்ருர். பின்வருமாறு:

தன தனன தான தான தனன தன தனன தானத் தன தாணு திருமகளுலாவு மிருபுயமுராரி திரு மருக நாமப் பெருமாள் காண் செக தலமும் வானும் மிகுதி பெறப் பாடல் திரு மருகநாமப் பெருமாள் காண். மருவு மடியார்கள் மனதில் விளையாடு மரகத மயூரப் பெருமாள் காண். மணிதரளம் வீசி யணி அரிவி சூழ கதிர்காமப் பெருமாள் காண். மருவு அருவரைகள் நீறு பட அசுரர் மாள அமர் பொருத வீரப் பெருமாள் காண். அரவு பிறைவாரி விரிவு சடை வேணி அமலர் குருநாதப் பெருமாள் காண். இரு வினையிலாத தருவினைவிடாத இமையவர்க்கு லேசப் பெருமாள் காண். இலகு சிலை வேடர் கொடியினிதிபார இரு தவி நோதப் பெருமாளே.

## பின்னுரை

வள்ளி முருகன் கதையை மிகவும் கஷ்டங்களுக் கிடையில் ஒரு வருடமாக பழைய புராணங்களையும் இதி காசங்களையும் தேடி அலைந்து கண்டு மிகவும் உன்னிப்பாக அவைகளை வாசித்தும் இன்னும், அனுபவம் உள்ள பெரி யார்களின் புத்திமதிகளோடும் உதவிகளோடும் முருகன் வள்ளிநாயகியின் அருளால் எழுதி முருக பக்தர்களுக்கு சமர்ப்பிக்கிறோம்.

நந்தி அரசனுல் தேவர்களும் தெய்வங்களும் புகழக் கூடியதாக வைத்திருந்த வள்ளி தினைப்புனத்தை எத்தனை யோ ஆயிரம் வருடங்களாக பொழியும் மாரியால் வெள் ளம் பெருக்கெடுத்து உருக்குலைந்து சிறுத்துவிட்டது. தெய்வங்கள் மனித ரூபத்தில் திருவிளையாடல் புரிந்த இயற்கை வளம் நிரம்பிய புனித பூமியை—ஈழவள நாட்டில் பிறந்த ஒவ்வொரு முருக பக்தனும் பங்கு கொண்டு முன்னேற்ற அழகிய நந்தவனம் ஆக்கிட முன் வரவேண்டும்.

வாழையடி வாழையாக வணங்கி வரும் கதிர்காம கந்தனை உலகம் உள்ள அளவும் எங்கள் சந்ததியையும் வணங்க வைக்க வேண்டும்.

எங்கள் ஊக்கத்தையும் உணர்ச்சியையும் மற்ற சமூ கத்தவர்கள் பார்த்து மெச்ச செய்ய வேண்டும். உரிமை யை நிலைநாட்ட வேண்டும். முருகன் அருளால் எல்லாம் கைகூடும்.

விநாயகருக்கு அரோகரா!
செல்லக் கதிர்காம கந்தனுக்கு அரோகரா!
வள்ளி தெய்வானைக்கு அரோகரா!

சுபம்! சுபம்! சுபம்!

வணக்கம்

# அறிவித்தல்

இந்த வள்ளியம்மன் கதைப் புத்தகத்தை தமிழில் எழுதுவதற்கு கெளரவ ஓக்கந்தையாய தேவானந்த தேரோ அவர்கள் நம்பிக்கையான ஆட்கள் இல்லாமல் மிகவும் மனம் வருந்தி இருந்தார். சுவாமி அவர்கள் என்னைச் சந்திக்க நேர்ந்தது அவருடன் நான் பழகினேன். சுவாமி அவர்களின் அன்பும், குணமும், என்னை மிகவும் கவர்ந்து விட்டது. குறிப்பாக எங்கள் சமூகத்தவரிடம் மிகவும் அன்பும், மதிப்பும், உள்ளவர்கள்.

சுவாமி அவர்களுக்கு தமிழ் அறிவு குறைவு என்ற படியினால், ஒரு வருடங்களுக்கு முன் வள்ளி அம்மன் கதையை தமிழில் எழுதித் தரும்படி கேட்டார்கள். அவர்கள் கேட்ட காலத்தில் இருந்து என்னுடைய அறிவையும் பாவித்து, புராண, இதிகாசங்களையும், பெரியார்களின் அறிவுரைகளோடும், இந்த புனித புத்தகத்தை எழுதி மேலே குறிப்பிட்ட சுவாமி அவர்களிடம் அர்ப்பணித்தேன்.

இந்தப் புத்தகத்தால் வரும் பணத்தைக் கொண்டு இந்த புனித பூமியை முன்னேற்றவும், அச்சிட்டு வெளி இடவும் ஆகிய உரிமைகளை சுவாமி அவர்களிடமே கொடுத்தேன்.

நான் ஒருவிதாமன பிரதி உபகாரம் இல்லாமல், தெய்வ தொண்டே முதற் தொண்டு என்னும் மனப் பான்மையோடு முருக பக்தர்கள் படித்து இன்புற சமர்ப்பித்தேன். முருகன் கருணையால் இப்படியான ஒரு தொண்டை செய்ய இந்த ஏழைக்கு சந்தர்ப்பம் கொடுத்ததை யிட்டு மனம் மகிழ்ந்து முருகன் வள்ளி தெய்வானையை மனதில் வைத்து பூசிக்கிறேன். பொருட் பிழை சொற் பிழை இருந்தால் மன்னிக்கவும்.

தயவுசெய்து முன்னுரை, அறிவித்தல்களை, படித்து அறியவும்.

வணக்கம்!

எழுதியவர்:

அன்புள்ள அடியார்கள் தொண்டன்
முருகேசு சுந்தரமூர்த்தி

பிறப்பு:

சாவகச்சேரி
யாழ்ப்பாணம்.

வாழ்க்கை:

அமிர்தகழி
மட்டக்களப்பு

## அறிவித்தல்

**ஸ்ரீ கந்தகுமார அட்டவர்க்க வாசனைத் திரவியம்:**

கதிர்காம கந்தனின் பூசையில் வைத்து ஆயிரம் தடவைகள் மந்திரம் செபித்து பக்குவம் செய்த வாசனைத் திரவியம் இதை காலை, மாலை, புகைப் பிடிக்க நாள் தவறாமல்.

கிரக தோஷங்கள் தீராத நோய்கள், பிசாசு பார்வைகள், செய்வினை தோஷங்கள், பகைமை, குடும்ப தகராறுகள் நீங்கும். வியாபார முன்னேற்றத்திற்கு மிகவும் நல்லது.

**ஸ்ரீ சரஸ்வதி யந்திரம்:**

சரஸ்வதி பூசையில் வைத்து முறைப்படி ஆயிரம் முறை செபித்த சரஸ்வதி யந்திரம். இதன் பலன் குழந்தைகளின் கல்வி முன்னேற்றத்திற்கு கல்வியில் ஞாபகசக்தி உண்டாவதற்கு, பரீட்சைகளில் தேற நேர்முகப் பரீட்சைகளில் தேற, மிகவும் அற்புதம் வாய்ந்த யந்திரம் வள்ளிபுனத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வேறு விதமான எல்லா விதமான முன்னேற்றங்களுக்கும், சுவாமி அவர்களைக் கண்டு கதைத்து அச்சவாரம் கொடுக்கவும். குறிப்பிட்ட தவணையில் பெற்றுக் கொள்ளலாம்.

வணக்கம்!

முற்றும்

சுவாமி அவர்களின் விலாசம்:

செல்லக் கதிர்காமம் மகாஸேன ரஜமகாவிகார,
செல்லக் கதிர்காமம்
கதிர்காமம்.

திலர அச்சகத்தில் அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது.